



. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936






www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 18.04.2026 • மலர் 04 • இதழ்: 108 • Edition : Nagercoil • 18.04.2026 • Vol : 04 • Issue : 108 • Page : 4 • Rs. 5/-

### மகளிர் இட ஒதுக்கீடு மசோதா

# அனைத்து எம்பிக்களிடமும் ஆதரவு கோரிய பிரதமர்

புதுடெல்லி, ஏப். 18

மகளிர் இட ஒதுக்கீட்டு மசோதாவுக்கு ஆதரவு அளிக்குமாறு அனைத்து எம்.பிக்களுக்கும் கடைசி நேர வேண்டுகோளை முன்வைத்துள்ளார் பிரதமர் மோடி.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "மகளிர் இட ஒதுக்கீடு சட்டத்தை திருத்துவது குறித்த விவாதம் தற்போது நாடாளுமன்றத்தில் நடைபெற்று வருகிறது. நேற்றிரவு 1 மணி வரையில் இந்த விவாதம் தொடர்ந்து நடைபெற்றது.தவறானபுரிதல்களை நீக்கும் வகையில் தர்க்க ரீதியிலான பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. எழுப்பப்பட்ட ஒவ்வொரு கேள்விக்கும் தெளிவான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. தேவைப்பட்ட கூடுதல் தகவல்களும் அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. எவருடைய மனதிலாவது எதிர்ப்பை ஏற்படுத்தக்கூடிய சிக்கல்கள் இருப்பின் அவையும் தீர்க்கப்பட்டுள்ளன.



நாட்டில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு விவகாரத்தைச் சுற்றி கடந்த 40 ஆண்டுகளாக பெருமளவிலான அரசியல் விளையாட்டுக்கள் அரங்கேறி வந்துள்ளன. நாட்டின் மக்கள் தொகையில் சரி பாதியாக உள்ள பெண்களுக்கு அவர்களுக்கான உரிமைகள் நிச்சயம் கிடைக்க வேண்டிய தருணம் இதுவே ஆகும். சுதந்திரம் பெற்று பல பத்தாண்டுகள் கடந்து விட்ட பின்னரும்கூட முடிவெடுக்கும் செயல் முறைகளில் இந்தியப் பெண்களுக்கு மிகக் குறைந்த அளவிலேயே பிரதிநிதித்துவம் இருப்பது ஏற்புடையது அல்ல. இன்னும் சற்று நேரத்தில் மக்களவையில் வாக்கெடுப்பு நடைபெற உள்ளது. அனைத்து அரசியல் கட்சிகளையும் நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். நான் ஒரு வேண்டுகோளை முன்வைக்கிறேன். தயவு செய்து உரிய முறையில் ஆலோசித்து முழுமையான உணர்வுப்பூர்வமான அக்கறையுடன் ஒரு முடிவை எடுத்து பெண்களுக்கான இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக வாக்களியுங்கள்.

நாட்டின் பெண்கள் சக்தியின் சார்பாக அனைத்து உறுப்பினர்களிடமும் நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து பெண் சக்தியின் உணர்வுகளைப் புண்படுத்தக்கூடிய எதையும் செய்துவிடாதீர்கள். நாட்டின் கோடிக்கணக்கான பெண்களின் கண்கள் நம் அனைவர் மீதும், நமது நோக்கங்கள் மீதும், நமது முடிவுகள் மீதும் பதிந்துள்ளன. தயவு செய்தி மகளிர் இட ஒதுக்கீடு சட்டத் திருத்தத்துக்கு உங்கள் ஆதரவை அளியுங்கள்" என தெரிவித்துள்ளார்.

### தருமபுரியில்

## தொகுதி மறு வரையறைக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்பு கொடி போராட்டம்



தருமபுரி ஏப்ரல் 18

தருமபுரியில் தொகுதி மறு வரையறைக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்பு கொடி ஏற்றும் போராட்டம் நடைபெற்றது. தொகுதி மறு வரையறை மசோதாவுக்கு நாடு முழுவதும் எதிர்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. தமிழகத்திலும் இந்த சட்ட திருத்த மசோதாவுக்கு திமுக தலைவர் மு.க .ஸ்டாலின் கடும் எதிர்ப்பை பதிவு செய்துள்ளார். அந்த வகையில் தருமபுரி கிழக்கு மாவட்ட திமுக சார்பில் தருமபுரி மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு அணி தலைவர் டி .ஏ. குமார் இல்லத்தில் கருப்பு கொடி ஏற்றி ஒன்றிய அரசின் பாசிச விரோத போக்கை கண்டித்தும் , தொகுதி வரைமுறையை குறுக்கு வழியில் கொண்டு வந்து தென்னிந்தியாவை வஞ்சிக்கும் ஒன்றிய அரசு உடனடியாக தொகுதி வரைமுறை மசோதாவை திரும்பப் பெற வலியுறுத்தி எனது கடுமையான கண்டனத்தை தெரிவித்து பாஜக அரசை கண்டித்து கருப்பு கொடியை ஏற்றி வைத்தார்.

உங்கள் அபிமான தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

### கிருஷ்ணகிரி நகரம் முழுவதும்

## திமுகவின் கரத்தை வலுப்படுத்த கை சின்னத்திற்க்கு வாக்கு கேட்டு காங்கிரஸ் கட்சியை சேர்ந்த துரை வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்



கிருஷ்ணகிரி, ஏப். 18

திமுகவின் கரத்தை வலுப்படுத்தவும், மீண்டும் மு க ஸ்டாலின் முதல்வர் பதவியை தொடரவும், கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்கு வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள டாக்டர் செல்லகுமாருக்கு ஆதரவாக காங்கிரஸ் நிர்வாகி துரை என்கின்ற துரைசாமி தலைமையில் கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். மேலும் பொதுமக்களிடம் துண்டு பிரசுரங்களை கொடுத்து, கடந்த 5 ஆண்டுகளில், தி.மு.க., தலைவர் ஸ்டாலின் சிறப்பான ஆட்சியை தந்துள்ளார். அன்புக்கரங்கள் என்ற திட்டம் மூலம் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கும் தாயுள்ளத்தோடு உதவுகிறார். கருணை உள்ளம் கொண்ட அவரது, அடுத்த ஆட்சியில் காலை உணவு திட்டம், 8ம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படவுள்ளது. 8,000 ரூபாய் கூப்பன் வழங்கப்படவுள்ளது. அதில், மக்கள் தாங்கள் விரும்பும் பொருட்களை வாங்கலாம். பண்டிகை காலங்களில் ஆபரில் பொருட்கள் எடுத்தால், 16,000 ரூபாய் மதிப்பு பொருட்கள் கூட கிடைக்கலாம். 10 லட்சம் பேருக்கு வீடுகள் கட்டித்தரப்படும் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார். கிருஷ்ணகிரி காங்கிரஸ் கட்சி வேட்பாளர் டாக்டர் செல்லகுமார் வெற்றி பெற்று, தி.மு.க., தலைவர் ஸ்டாலின் மீண்டும் முதல்வராக அமர்ந்தவுடன் மேலும் பல திட்டங்களை செய்வார் என்றும், நலத்திட்டங்கள் தொடர்ந்திட, தி.மு.க., அரசை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவருவது உங்கள் பொறுப்பு என கூறி பொதுமக்களிடம் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியில் கூட்டணி கட்சியை சேர்ந்த திமுக மாவட்ட வர்த்தக அணி துணை தலைவர் ராஜசேகர், முன்னாள் நகரமன்ற உறுப்பினர் ஜான் டேவிட், மாவட்ட துணை தலைவர் காங்கிரஸ் சிறுபான்மை பிரிவு மாவட்டத் துணைத் தலைவர் முஸ்தாக் அகமது, நெசவாளர் அணி துணை அமைப்பாளர் திருமலை, சிறுபான்மை பிரிவு துணை அமைப்பாளர் ஜெயராஜ், வினோத், சேகர், பிரதீப், உள்ளிட்டா ஏராளமான கலந்து கொண்டனர்.

## பாராளுமன்றம் முதல் சட்டமன்றம் வரை மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர் தளவாய்சுந்தரம்

### நடிகர் தாடி பாலாஜி தீவிர வாக்கு சேகரிப்பு!

நாகர்கோவில்,ஏப்.18

கன்னியாகுமரி தொகுதி வேட்பாளர் தளவாய்சுந்தரத்தை ஆதரித்து நடிகர் தாடி பாலாஜி நேற்று வட்டக்கோட்டை மற்றும் லீபுரம் பகுதிகளில் திறந்த வாகனத்தில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது பேசிய அவர் உங்கள் வேட்பாளர் தள வாய்சுந்தரத்தை ஆதரித்து பிரச்சாரம் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். பிரச்சாரத்திற்கு செல்லும் இடமெல்லாம் மக்கள் அவரை மகிழ்ச்சியோடு வரவேற்கிறார்கள். அதை பார்க்கும் போது அவர் வெற்றி பெறுவர் என்ற நம்பிக்கை வந்துவிட்டது. ஒருவர் பாராளுமன்றம் முதல் சட்டமன்றம் வரை செல்ல வேண்டும் என்றால் புரட்சி தலைவி அம்மாவின் மனதில் இடம் பிடிக்க வேண்டும்; அப்படி இடம்பிடித்தவர் தான் தளவாய் சுந்தரம்.



இந்த இடங்களில் உள்ள ஆறுகள், குளங்களை பார்க்கும் போது தூய்மையான நகரமாக உள்ளது. அதற்கு தளவாய்சுந்தரத்தின் பணி தான் காரணம். மீண்டும் உங்கள் பகுதியில் பல நலத்திட்டங்கள் செய்திட அவருக்கு இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்யுங்கள் என அவர் கூறினார்.

இதில் கலப்பை மக்கள் இயக்கதலைவர் பி.டி.செல்வகுமார், கன்னியாகுமரி தொகுதி அதிமுக வேட்பாளர் தளவாய்சுந்தரம் உட்பட அதிமுக மற்றும் கலப்பை மக்கள் நிர்வாகிகள் தொண்டர்கள் பலர் கலந்துகொண்டனர்.



### நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி

## பாஜ வேட்பாளர் எம் ஆர் காந்தி தீவிர பிரச்சாரம்

நாகர்கோவில், ஏப். 18

நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி பாரதிய ஜனதா கட்சியின் வேட்பாளர் எம். ஆர். காந்தி எம்எல்ஏ நேற்று காலை சூரப்பள்ளம் பகுதியில் இருந்து தனது பிரச்சாரத்தை தொடங்கினார். தொடர்ந்து மஞ்சாடி அம்மன் கோவில், புதுமடம், புதுார் விநாயகர் கோவில், அழகன்விளை, கணபதிபுரம், கிழக்கு கணபதிபுரம், தெக்கூர், சன்னதி தெரு, பூச்சிக்காடு, ஆலங்கோட்டை, கோவில் புரம், பரமன் விளை, ஆறு தெங்கன் விளை, அழிக்கால், பிள்ளை தோப்பு போன்ற பகுதிகளில் திறந்த ஜீப்பில் சென்று பிரச்சாரம் செய்தார்.

மாலையில் வெள்ள மோடி உள்ளிட்ட பகுதிகளில் பிரசாரம் செய்தார். பிரச்சாரத்தில் எம் ஆர் காந்தி பேசியதாவது: பிரதமர் நரேந்திர மோடியின் கரத்தை வலுப்படுத்த தாமரை சின்னத்திற்கு நீங்கள் ஒவ்வொருவரும் வாக்களிக்க வேண்டும். இந்த தொகுதி வெற்றியை பிரதமரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

கடந்த 5 ஆண்டு காலம் எம்எல்ஏவாக ஏராளமான திட்டங்களை இந்த தொகுதிக்கு தந்துள்ளேன். ரேஷன் கடைகள், சமுதாய நல கூடம் உள்ளிட்ட பல்வேறு கட்டிடங்கள் கட்டியுள்ளேன். தொகுதி நிதி முழுவதும் 100 சதவீதம் மக்களுக்காக செலவழித்துள்ளேன்.

என்னை எப்போது வேண்டுமானாலும் பொதுமக்கள் சந்திக்கலாம். பாரதிய ஜனதா அதிமுக கூட்டணிக்கு வாக்குகளை தர வேண்டும். பெண்களுக்கு ரூ. 2000 உதவி தொகை கிடைக்கும். தீபாவளி, பொங்கல், தமிழ் புத்தாண்டுக்கு தலா ஒரு சிலிண்டர் இலவசமாக வழங்கப்படும். ஒருமுறை ரூ.10,000 வழங்கப்படும். அனைத்து குடும்பங்களுக்கும் பிரிட்ஜ் கிடைக்க வழி வகைகள் செய்யப்படும். கிராமங்களில் குடிநீர், சாலை வசதி முறையாக செய்து தரப்படும். அரசு பஸ்கள் முறையாக இயங்க நடவடிக்கை எடுக்கப்படும். பிரதமர் நேரடி கவனத்திற்கு செல்லும் வகையில் முன்மாதிரி தொகுதியாக நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி மாற்றி காட்டுவேன். எனவே இந்த முறை மீண்டும் தாமரை சின்னத்திற்கு எனக்கு வாக்களிக்க வேண்டும். என கூறினார். இந்த பிரச்சாரத்தின் போது பல்வேறு கோவில்களில் அவர் தரிசனம் செய்தார். அவருக்கு பொது மக்கள் சார்பில் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது.




ஜே. சி. ஐ .தருமபுரி விங்க்ஸ் மற்றும் அங்காளம்மன் பாராமெடிக்கல் கல்லூரி சார்பில் 100% வாக்களிப்பதின் அவசியம் குறித்து" என் வாக்கு என் உரிமை" விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில்மாபெரும்கையெழுத்துஇயக்கம்மற்றும்பேரணியைவட்டாட்சியர் சுகுமார் துவக்கி வைத்தார். இதில் கல்லூரி தாளாளர் சிலம்பரசன்,ஜே. சி. ஐ .தருமபுரி விங்க்ஸ் மற்றும் அங்காளம்மன் பாராமெடிக்கல் கல்லூரி சார்பில் 100% வாக்களிப்பதின் அவசியம் குறித்து" என் வாக்கு என் உரிமை" விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாபெரும் கையெழுத்து இயக்கம் மற்றும் பேரணியை வட்டாட்சியர் சுகுமார் துவக்கி வைத்தார். இதில் கல்லூரி தாளாளர் சிலம்பரசன், ஜே. சி. ஐ தருமபுரி விங்க்ஸ் கோகுல்ராஜ், பிரபாகரன், ஜெகதீஷ், தனலட்சுமி, பிரகாஷ், பாலகணேஷ், ஒன் ஹெல்த் மருத்துவமனை மேலாளர் கார்த்திக், கபில்தேவ் , பாவல்ராஜ் மற்றும் கல்லூரியின் ஆசிரியர்கள் , மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

## கீழப்பாவூர் மத்திய ஒன்றிய பகுதிகளில்

# கருப்பு சட்டை அணிந்து வாக்கு சேகரித்த திமுக வேட்பாளர் மருத்துவர் கலை கதிரவன்



தென்காசி ஏப்ரல்18

தென்காசி மாவட்டம் கீழப்பாவூர்மத்திய ஒன்றிய பகுதிகளில் தென்காசி சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் மருத்துவர் கலை கதிரவன் கருப்பு சட்டை அணிந்து தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

தென்காசி தொகுதி திமுக வேட்பாளர் மருத்துவர் கலைகதிரவன் கீழப்பாவூர் மத்திய ஒன்றிய பகுதிகளான இடையர்தவணை, இனாம்வெள்ளகால், ராஜபாண்டி, தாயார்தோப்பு, செம்புலிபட்டணம், கோவிந்தபேரி, வீரகேரளம்புதூர், ராஜகோபாலபேரி, அதிசயபுரம், ராமனூர், கலிங்கப்பட்டி, கோட்டை அண்ணாநகர் ஆகிய பகுதிகளில் வீதி, வீதியாக சென்று உதயசூரியன் சின்னத்துக்கு வாக்கு கேட்டார்.

மத்திய அரசின் தொகுதி மறுசீரமைப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் வேட்பாளர் கலைகதிரவன் கருப்பு சட்டை அணிந்து பிரசாரத்தில் ஈடுபட்டது அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. அவர் பொது மக்கள் மத்தியில் பேசும் போது இப்பகுதி மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்திடவும், பேருந்து, சாலை வசதி செய்து தரவும் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

இப்பிரச்சாரநிகழ்ச்சியில் தென்காசி முன்னாள் தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வக்கீல் பொ. சிவபத்மநாதன், மத்திய ஒன்றிய பொறுப்பாளர் ஜேசுராஜன், கீழப்பாவூர் யூனியன் சேர்மன் காவேரி சீனித்துரை, தேமுதிக மாவட்ட செயலாளர் பழனிசங்கர், மதிமுக மாவட்ட செயலாளர் உதயசூரியன், முன்னாள் தென்காசி நகராட்சி தலைவர் கோமதிநாயகம், மாவட்ட கவுன்சிலர் சுப்பிரமணியன், வட்டார காங்கிரஸ் தலைவர் குமார் பாண்டியன், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் மாஸ்டர் கணேஷ், ஒன்றிய கவுன்சிலர் தர்மராஜ், இளைஞரணி பாரத் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளைசேர்ந்தநிர்வாகிகள், உறுப்பினர்கள்பலர்கலந்து கொண்டனர்.

## தருமபுரி சட்டமன்றத் தொகுதியில்

# பாமக வேட்பாளர் சௌமியா அன்புமணி தீவிர வாக்கு சேகரிப்பு




தருமபுரி ஏப்ரல் 18

தருமபுரி சட்டமன்ற தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும் பாமக வேட்பாளர் சௌமியா அன்புமணி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். மேலும் நல்லம்பள்ளி ஒன்றியம் இண்டூர் மற்றும் ஊராட்சிகளுக்குப் பட்ட பகுதிகளில் கிராமம் கிராமமாக சென்று வேட்பாளர் சௌமியா அன்புமணி மாம்பழம் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். அப்போது அவருக்கு பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர். இதைத் தொடர்ந்து அவர் கூறியதாவது. காவேரியிலிருந்து கடலில் கலக்கும் உபரி நீரை மீன் மோட்டார் மூலம் ஏரி, குளம் ஆகியவைகளில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் . சிப்காட் பணி நிறைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். தருமபுரி முதல் மொரப்பூர் வரை ரயில்வே பணி விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். பாமக மாவட்ட செயலாளர்கள் எஸ். பி. வெங்கடேஸ்வரன், அரசாங்கம் அதிமுக நல்லம்பள்ளி ஒன்றிய செயலாளர் பழனி மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் உடனிருந்தனர்.

## பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதி

# திமுக வேட்பாளர் பி. பழனியப்பன் பொதுமக்களிடம் தீவிர வாக்கு சேகரிப்பு



தருமபுரி ஏப்ரல் 18

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் திமுக வேட்பாளர் பி. பழனியப்பன் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில் பாப்பிரெட்டிப்பட்டி தொகுதிக்கு உட்பட்ட முக்கல் நாயக்கன்பட்டி நூலஅள்ளி செட்டி கரை ஆகிய ஊராட்சிகளை சேர்ந்த 70க்கும் மேற்பட்ட கிராமங்களில் சூறாவளிசுற்றுப்பயணம் செய்து தனக்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.

அப்போது அவர் பேசுகையில் திமுக அரசின் 5 ஆண்டு ஆட்சியில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு நெல் கொள்முதல் குவிண்டாலுக்கு விலை ரூ. 3,500, கரும்பு டன் ரூ. 4,000 வழங்கப்படும், பால்கொள்முதல்விலை ஐந்து உயர்த்தி தரப்படும், மீட்டர் பொருத்தாமல் நவீன மின்சார பம்புசெட்டுகள் வழங்கப்படும் என்றார். இந்த பிரச்சாரத்தின் போது ஒன்றிய செயலாளர் சக்திவேல், வெற்றி உள்ளிட்ட கூட்டணி கட்சிகளில் நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# இன்று திருச்சி வரும் ராகுல்; பாதுகாப்புக்கு ஏற்பாடுகள் தீவிரம்



தமிழ்நாட்டில் மூன்று நாள் பரப்புரையில் காங்கிரஸ் கட்சி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மூத்த தலைவர் ராகுல் காந்தி ஆகிய இருவரும் ஈடுபட உள்ளனர்.

காங்கிரஸ் போட்டியிடும் பொன்னேரி, சோளிங்கர், துறையூர் ஆகிய தொகுதிகளில் ராகுல்காந்தி இன்று(ஏப்.,18) பிரசாரம் செய்கிறார். 'இண்டி' கூட்டணியில் உள்ள காங்கிரசின் ராகுல், கடந்த 6ம் தேதி புதுச்சேரியில் பிரசாரம் செய்தார். திமுக, பெயரைகூட தன் பேச்சில் ராகுல் குறிப்பிடவில்லை. அதே நாளில், 'இண்டி' கூட்டணியில் இடம்பெற்றுள்ள திமுக,வின் தலைவரும், தமிழக முதல்வருமான ஸ்டாலினும் புதுச்சேரியில் பிரசாரம் செய்தார். ஆனால், இருவரும் சந்தித்துக் கொள்ளவில்லை. இந்நிலையில், தமிழகத்தில் பொன்னேரி, சோளிங்கர், துறையூர் ஆகிய மூன்று தொகுதிகளில் ராகுல் இன்று பிரசாரம் செய்கிறார். இன்று காலை 11:10 மணிக்கு டில்லியிலிருந்து தனி விமானம் வாயிலாக சென்னை வரும் ராகுல், அங்கிருந்து ஹெலிகாப்டர் வாயிலாக, திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி செல்கிறார். பொன்னேரி பிரசார கூட்டத்தில் பேசும் ராகுல், அதன் பின் ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் தொகுதியில் பிரசாரம் செய்கிறார். அங்கிருந்து ஹெலிகாப்டரில் சென்னை விமான நிலையம் வரும் அவர், பகல் 2:45 மணிக்கு சிறப்பு விமானம் வாயிலாக திருச்சி வருகிறார். திருச்சி விமானநிலையத்தில் காங்கிரஸ் பிரமுகர்களின் வாழ்த்துக்களை வரவேற்பை பெற்ற பின்பு தனி ஹெலிகாப்டர் மூலம் துறையூர் செல்கிறார்.

திருச்சியில் இருந்து ஹெலிகாப்டரில் துறையூர் சென்று, பிரசார கூட்டத்தில் பங்கேற்ற பின்பு மீண்டும் ஹெலிகாப்டரில் திருச்சி திரும்பி, அங்கிருந்து டில்லி செல்கிறார். ராகுல் பிரசாரம் செய்யும் மூன்று தொகுதிகளுமே காங்கிரஸ் போட்டியிடுபவை. இங்கு நடைபெறும் கூட்டங்களில், காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களுக்கு மட்டும் ஓட்டு சேகரிப்பாரா அல்லது திருவள்ளூர், ராணிப்பேட்டை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள திமுக கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களையும் ஆதரித்து ராகுல் பிரசாரம் செய்வாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

மேலும், தமிழக தேர்தல் பிரசார களத்தில் முதல்வர் ஸ்டாலினுடன் இணைந்து ராகுல் எப்போது பிரசாரம் செய்வார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

முன்னதாக, திருச்சி மாவட்டம் துறையூரில் இளைஞா் காங்கிரஸின் தேசியப் பொதுச் செயலராக உள்ள லெனின் பிரசாத் போட்டியிடுகின்றார். அவருக்கு ஆதரவாக தோ்தல் பிரசாரத்துக்காக காங்கிரஸ் கட்சியின் மூத்தத் தலைவா் ராகுல்காந்தி இன்று 18ஆம் தேதி துறையூரில் பிரசாரம் செய்யவும், சாலைப் பேரணி செல்லவும் ராகுல்காந்தி திட்டமிட்டுள்ளாா்.

இதனை அடுத்து ராகுல்காந்தி வரவிருக்கும் ஹெலிகாப்டா் தரை இறங்குவதற்காக அங்குள்ள அரசு உதவி பெறும் பள்ளியில் அமைக்கப்படும் இறங்கு தளம், அங்கிருந்து அவா் பிரசாரம் மேற்கொள்ளவுள்ள திடல் வரை செல்லும் சாலை, பிரசார திடல் ஆகிய பகுதிகளை தேசிய பாதுகாப்பு படையினரும், திருச்சி மாவட்ட காவல் துறையினரும் நேரில் பாா்வையிட்டு ஆய்வு செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தாணுமாலயா சுவாமி கோவில் தெப்பத் திருவிழா

# தண்ணீர் கொண்டு வரும் பாதையில் அடைப்புகளை சரி செய்யும் பணிகள்



சுசீந்திரம், ஏப். 18

சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோவில் தடுப்பு சுவர் ஒருபுறம் இருப்பு இருந்ததை சரி செய்வதற்காக ஒரு கோடியே 42 லட்ச ரூபாய் செலவில் பழமை மாறாமல் புதுப்பிக்கும் பணி நடைபெற்று வந்தது தற்போது அந்தப் பணியானது முடிவடைந்த நிலையில் குளத்தில் தண்ணீர் இல்லாத காரணத்தினால் தண்ணீர் கொண்டு வருவதற்கு பழைய ஆற்றில் போதிய தண்ணீர் இல்லாத காரணத்தினாலும் சோழன் திட்டை அணையில் இருந்து மோட்டார் மூலம் பம்பிங் செய்து இரண்டு பெரிய மோட்டார் மூலம் அணையில் இருந்து தண்ணீர் தெப்பக்குளத்திற்கு கொண்டுவரும் பணி நடைபெற்று வந்தது இந்நிலையில் தண்ணீர் வரும் பாதைகளில் ஆங்காங்கு அடைப்பு ஏற்பட்டுள்ளன பின்பு ஜேசிபி இயந்திரம் மூலம் சுசீந்திரம் துவாரகா கிருஷ்ணன் கோவில் அருகே ஏற்பட்டுள்ள அடைப்பை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது அதுபோல சுசீந்திரம் பேரூராட்சிக்கு எதிரே உள்ள பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள அடைப்புகளையும் சரி செய்யும் பணியும் வேகமாக நடைபெற்று வருகிறது இன்று தெப்பத் திருவிழாவிற்கு காலை பத்து முப்பது மணி அளவில் கொடியேற்று நிகழ்ச்சி நடைபெறுகிறது வரும் 27 ஆம் தேதி தெப்பத் திருவிழா நடைபெற உள்ளதால் தண்ணீர் கொண்டு வரும் பணியானது வெகு வேகமாக நடைபெற்று வருகிறது

# திருச்சி: காதலுக்கு தாய் மறுப்பு இளம்பெண் தற்கொலை

திருச்சி, ஏப். 18

திருச்சி மாவட்டம் எட்டரை பகுதியைச் சேர்ந்த வேம்பு என்ற செவிலியர், தான் விரும்பிய நபரை திருமணம் செய்து வைக்க தாய் மறுத்ததால் மன வருத்தமடைந்து வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்துஅளிக்கப்பட்டபுகாரின்பேரில்சோமரசம்பேட்டை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




தருமபுரி மாவட்ட புதிய ஆட்சியர் அலுவலகம் வளாகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறுவதையொட்டி 100% வாக்களிப்பது அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் சதீஷ் மரக்கன்றுகளை நட்டு வைத்து தேர்தல் விழிப்புணர்வை ஏற்படுத்தினார் . மாவட்ட ஊரக வளர்ச்சி முகாமை திட்ட இயக்குனர் ரூபன் சங்கர் ராஜ், மகளிர் திட்ட அலுவலர் சுந்தர்ராஜன், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் கவிதா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் லோகநாதன் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் மற்றும் மகளிர் குழு உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

# மொடக்குறிச்சியில் 19ந் தேதி அமித்ஷா பிரசாரம்

## ஈரோட்டில் நயினார் நாகேந்திரன் பேட்டி



ஈரோடு ஏப் 18

தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் நயினார் நாகேந்திரன் ஈரோட்டில் நிருபர்களிடம் கூறியதாவது

மொடக்குறிச்சி தொகுதியில் பிரசாரம் செய்வதற்காக வருகிற 19 ந் தேதி மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா வருகிறார்.

தமிழ்நாட்டில் கஞ்சா மற்றும் போதைப் பொருள் புழக்கம் அதிகமாக உள்ளது. இதை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்று அனைத்து பெண்களும் விரும்புகின்றனர். பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காக பாராளுமன்றத்தில் 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்க வரைமுறை திட்டத்தை மத்திய அரசு ஏற்பாடு செய்து உள்ளது. தமிழக முதல்வர் எதற்கெடுத்தாலும் மத்திய அரசை குறை கூறி எதிர்த்து வருகிறார். அவர் மோதல் போக்கு இல்லாமல் கடமை யாற்ற தவறி விட்டார்.

மாற்றம் ஏற்பட வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர். ஆனால் திமுக மக்களை ஏமாற்றும் வேலையை செய்கிறது. உதயநிதியை முதல்அமைச்சராக ஆக்குவது தான் மு க ஸ்டாலினின் எண்ணம். முதல் அமைச்சர் மு க ஸ்டாலினுக்கு தோல்வி பயம் ஏற்பட்டு விட்டது. இதனால் தான் அவர் சம்பந்தம் இல்லாமல் பேசி வருகிறார். தமிழ்நாட்டில் மக்கள் மாற்றத்தை விரும்புவதால் தேசிய ஜனநாயக கூட்டணி அனைத்து இடங்களிலும் வெற்றி பெற அதிக வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது முன்னாள் எம் பி ராமலிங்கம் டாக்டர் சி கே சரஸ்வதி எம் எல் ஏ தெற்கு மாவட்ட தலைவர் எஸ் எம் செந்தில் ஊடக பிரிவு தலைவர் ஸ்ரீதர் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



# திமுகவில் பெண்களுக்கு முன்னுரிமை அளிப்பதில்லை; விஜயதரணி பேட்டி

நாகர்கோவில், ஏப்.18

விளவங்கோடு தொகுதி பாஜக வேட்பாளர் விஜயதரணி நேற்று பயணம் , இரவிபுதூர்க்கடை பகுதிகளில் தேர்தல் பிரச்சாரத்தின் போது செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில் ,

மகளிர் இடஒதுக்கீடு மசோதாவுக்காக தானும் நீண்ட காலமாக இந்தச் சட்டத்திற்காகப் பரிந்துரைத்து வந்ததாகவும், பிரதமர் மோடியின் முயற்சிகளால் அது தற்போது நனவாகியுள்ளது.

மாநில சட்டமன்றங்கள் மற்றும் நாடாளுமன்றத்தில் 33% இட ஒதுக்கீடு பெண்களுக்குப் பெரிதும் பயனளிக்கும் என்றும், அது அவர்களின் பிரச்சினைகளை மிகவும் திறம்பட விவாதிக்க வழிவகுத்து, அரசியல் அமைப்பில் ஒரு முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

தொகுதி மறுவரையறை காரணமாக இந்தச் சட்டம் தென்னிந்திய மாநிலங்களைப் பாதிக்கக்கூடும் என்ற திமுக மற்றும் கூட்டணிக் கட்சிகளின் விமர்சித்து வருகின்றன. இவை திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் பொய்ப் பிரச்சாரம். கருப்பு சட்டை அணிந்து கொண்டு பாராளுமன்றம் சென்ற திமுகவினருக்கு பிரதமர் சவுக்கடி கொடுத்துள்ளார்.

இந்தச் சட்டம் அரசியலில் பெண்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும். திமுக உண்மையாகவே பெண்கள் அதிகாரமளித்தலை ஆதரிக்காததால் கவனத்தைத் திசை திருப்ப முயற்சிக்கிறது. திமுக தனது கட்சிக்குள் பெண்களுக்கு குறிப்பிடத்தக்க அரசியல் உரிமைகளையோ முக்கியத்துவத்தையோ வழங்குவதில்லை.

கனிமொழி ஓரங்கட்டப்படுவதை இதற்கு காரணமாக கூறலாம். மு.க ஸ்டாலின் எப்போதாவது கனிமொழியை முதலமைச்சராக்குவாரா ? அவர் தனது மகன் உதயநிதி ஸ்டாலினை முன்னிறுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளார்.

தான் காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, அப்பதவியை வகிக்கவிடாமல் தடுப்பதற்காக திமுக, காங்கிரஸ் கட்சிக்குஅழுத்தம் கொடுத்தது. சட்டமன்றத்தின் முன் வரிசைகளிலோ அல்லது முக்கிய தலைமைப் பதவிகளிலோ பெண்களை திமுக விரும்பவில்லை எனவும் விஜயதரணி பேட்டி அளித்துள்ளார்.

# நாகர்கோவிலில் பிரதமர் ரோடு ஷோவில் விதிமுறைகளை மீறியதாக பா ஜ, அதிமுக மீது வழக்கு பதிவு

நாகர்கோவில், ஏப். 18

நாகர்கோவிலில் கடந்த 15ஆம் தேதி பாரத பிரதமர் நரேந்திர மோடி ரோடு ஷோ நிகழ்ச்சி நடத்தி வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். வேப்பமூடு சந்திப்பு முதல் வடசேரி அண்ணா சிலை சந்திப்பு வரை சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் ரோடு ஷோ நடத்தினர். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, பாரதிய ஜனதா மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், பா ஜ தேசிய செயற் குழு உறுப்பினர் பொன் ராதாகிருஷ்ணன், பாரதிய ஜனதா முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சி நடைபெற்ற பகுதி மட்டுமின்றி நாகர்கோவில் மாநகர் முழுவதும் பாரதிய ஜனதா, அதிமுகவினர் கொடி கட்டி இருந்தனர். இதில் நாகர்கோவில் கலெக்டர் அலுவலக சந்திப்பில் உள்ள ரவுண்டானாவை சுற்றியும் பாரதிய ஜனதா, அதிமுக கொடிகள், பிளக்ஸ் பேனர்கள் வைக்கப்பட்டு இருந்தன.

இந்த பகுதியில் ஏற்கனவே அரசியல் கட்சி சம்பந்தமான கொடிகள், பேனர்கள் வைக்க கூடாது என தடை உள்ளது. இந்த நிலையில் தடையை மீறி பாரதிய ஜனதா மற்றும் அதிமுகவினர் செயல்பட்டதாக புகார் எழுந்தது. இது தொடர்பாக நேசமணி நகர் சப்இன்ஸ்பெக்டர் கீதா அளித்த புகாரின் பேரில் தேர்தல் விதிமுறை மீறி அதிமுக , பாரதிய ஜனதா கட்சியினர் கலெக்டர் அலுவலகம் வெளியே கொடி கட்டியதாக தற்போது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

### குமரியில் 2ம் நாளாக

# மின்னணு இயந்திரங்களில் சின்னங்கள் பொருத்தும் பணிகள் நடைபெற்றது



நாகர்கோவில், ஏப். 18

குமரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளில் 85 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

இதில் நாகர்கோவில் தொகுதியில் மட்டும் 20 வேட்பாளர்களும், கன்னியாகுமரி தொகுதியில் 14 வேட்பாளர்களும், விளவங்கோடு தொகுதியில் 14 வேட்பாளர்களும், குளச்சல் தொகுதியில் 13 வேட்பாளர்களும், கிள்ளியூர் தொகுதியில் 11 வேட்பாளர்களும், பத்மநாதபுரம் தொகுதியில் 11 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

இதில் நாகர்கோவில் தொகுதியில் மட்டும் 20 வேட்பாளர்கள் போட்டியிடுவதால் அங்கு இரண்டு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. இதற்காக நேற்று முன்தினம் முதல் இயந்திரங்களில் பாதுகாப்பாகசின்னங்கள்பொருத்தம் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது.

இதில் கிள்ளியூர் தொகுதி மற்றும் விளவங்கோடு தொகுதிக்கான சின்னம் பொருத்தம் பணிகள் நிறைவு பெற்று அவைகள் பத்திரமாக பாதுகாப்பாக அலுவலகங்களில் அறையில் பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளன.

நாகர்கோவில் தொகுதிக்கான சின்னங்கள் பொருத்தும்பணி கலெக்டர்அலுவலக வளாகத்திலும், கன்னியாகுமரி தொகுதிக்கான பணிகள் பூதப்பாண்டி தாலுகா அலுவலகத்திலும், பத்மநாபபுரம் தொகுதிக்கான பணிகள் திருவட்டார் தாலுகா அலுவலகத்திலும், குளச்சல் தொகுதிக்கான பணிகள் அங்குள்ள தாலுகா அலுவலகத்திலும் நேற்றும் நடைபெற்றன. இந்த பணிகள் முடிவடைந்த பின் அனைத்தும் பாதுகாப்பு அறையில் பூட்டி சீல் வைக்கப்படும் எனவும், பின்னர் இந்த இயந்திரங்கள் வரும் 22ஆம் தேதி மதியத்துக்கு பின்பு அந்தந்த வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று அதிகாரிகள் கூறினார்கள்.



### குமரி மாவட்டத்தில்

# பறக்கும் படை சோதனையில் சிக்கிய பணம்; ரூ 1 கோடியை தாண்டியது

நாகர்கோவில், ஏப். 18

சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் 5 நாட்கள் மட்டுமே உள்ளது. இந்த நிலையில் தேர்தல் களம் சூடு பிடிக்க தொடங்கியுள்ளது.

இதையொட்டி தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் மாவட்டம் முழுவதும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். 24 மணி நேரமும் இந்த சோதனைகள் நடத்தப்பட்டு வருவதால் வாகன சோதனைகள் அனைத்தும் முழுமையாக வீடியோ பதிவு செய்யப்படுகின்றன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை முதல் நேற்று காலை வரை நடத்தப்பட்ட சோதனையில் ஒரே நாளில் ரூ.19 லட்சத்து 69 ஆயிரத்து 350 ரூபாய் ரொக்க பணம் பறக்கும் படை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

இதில் கன்னியாகுமரி தொகுதியில் இரண்டு இடங்களில்ரூ.3,37,750 பறிமுதல் செய்யப்பட்டது. குளச்சல் தொகுதியில் ரூ 5, 80,000 சிக்கியது. விளவங் கோடு தொகுதியில் 51 ஆயிரத்து 600 பறிமுதல் செய்யப்பட்டது. நாகர்கோவில் தொகுதியில் அதிகபட்சமாக ரூ 10 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது. மாவட்ட முழுவதும் கடந்த 15ஆம் தேதி முதல் நடந்த சோதனையில் இதுவரை மொத்தம் 1, 07,75, 150 ரூபாயை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் ஐ முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டம், தளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, கடைகோடி மலை கிராமமான, பெட்டமுகிளாலம் ஊராட்சி, வனபகுதியில் அமைந்துள்ள கடமகுட்டை கிராமத்தில் உள்ள வாக்கு சாவடி மையத்தை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் 6.5 கி.மீட்டர் நடந்து சென்று நேரில் பார்வையிட்டு மலைவாழ் மக்களுக்கு வாக்காளர் விழிப்புணர்வு பிரசுரங்களை வழங்கி பொதுமக்களிடம் கலந்துரையாடினார்.



### தேனி மாவட்ட கலெக்டர் தலைமையில்

# மங்கலதேவி கண்ணகி கோயில் விழா முன்னேற்பாடு பணிகள் குறித்த ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

தேனி, ஏப். 18

தேனி மாவட்டம், தமிழகேரள எல்லையில் அமைந்துள்ள மங்கலதேவி கண்ணகி கோயில் சித்திரை முழு நிலவு விழா (01.05.2026) அன்று நடைபெறவுள்ளதை முன்னிட்டு, தேக்கடியில் உள்ள பெரியார் புலிகள் காப்பக மூங்கில் காடு அரங்கத்தில், முன்னேற்பாடு பணிகள் குறித்த ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், மற்றும் இடுக்கி மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷன் சேருவாட், ஆகியோர் தலைமையில் இடுக்கி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சாபூ மத்யூ சார் ஆட்சியர் அனுப் கார்க், ஆகியோர் முன்னிலையில்(17.04.2026) நடைபெற்றது.

மங்கலதேவிகண்ணகி கோயில் சித்திரை முழு நிலவு விழா ஆண்டுதோறும் சித்ரா பௌர்ணமி தினத்தன்று தமிழககேரள மக்களால் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது, இவ்வாண்டு 01.05.2026அன்றுநடைபெறஉள்ளதையொட்டி, திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்ய இருப்பதால் தமிழக மற்றும் கேரள பக்தர்கள் குமுளியில் இருந்து கோவிலுக்கு செல்லுவதற்கு ஏதுவாக போக்குவரத்து வசதி, சுகாதாரம், குடிநீர், தற்காலிக பந்தல்கள் மற்றும் கழிப்பிட வசதி, பாதைகள் செப்பனிடுதல் போன்ற பணிகள் மேற்கொள்வது குறித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், கோயிலுக்கு வருகை தருகின்ற பக்தர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குவது, தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவது குறித்து, சுகாதாரத்துறை மற்றும் தீயணை ப்புத்துறை, வனத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அலுவலர்களுடன் மேற்கொள்ளவேண்டிய பணிகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

பசுமை சோதனை சாவடிகள் அமைத்து, பக்தர்கள் தடைசெய்யப்பட்டபிளாஸ்டி பொருட்களை கொண்டு செல்ல அனுமதிக்கக் கூடாது. வனப்பகுதியில் எளிதில் தீப்பற்றக்கூடியபொருட்கள் பயன்படுத்துவதை தவிர்க்க உரிய இடங்களில் விழிப்புணர்வு பதாகைகளை வைத்தல் வேண்டும். மேலும், கோடைகால வெப்பத்தின் தாக்கம் அதிகமாக இருப்பதால் கூடுதலாக குடிநீர், உணவு, கழிவறை உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் செய்துதர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பக்தர்களின் பாதுகாப்பிற்காக போதிய அளவில் காவலர்களை சுழற்சி முறையில் நியமனம் செய்யப்பட உள்ளார்கள்.

கடந்தாண்டைப் போன்று இந்தாண்டும், பக்தர்கள் பாதுகாப்புடன் எவ்வித சிரமமின்றி மங்கலதேவி கண்ணகி கோயிலில் வழிபாடு செய்து திரும்பும் பொருட்டு தேவையான போக்குவரத்து வசதி ஏற்பாடு செய்யப்பட உள்ளது. மேலும் கோயிலுக்கு செல்லும் வாகனங்களுக்கு அனுமதிச்சீட்டு வழங்கும் வகையில், வாகன தரச் சான்றிழ் வழங்கப்படவுள்ளது.

மேலும், பளியன்குடி வழியாக வருகை தரும் பக்தர்களுக்கு தேவையான கூடுதல் மருத்துவ முகாம்கள், பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. பக்தர்களின் வசதிக்காக ஆங்காங்கே வழிகாட்டி பலகை வைக்கப்பட உள்ளளது. அவசர நிகழ்வுகளுக்காக சுகாதாரத்துறையின் மூலம் மருத்துவ குழுவினருடன் ஆம்புலன்ஸ் வாகனங்கள் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மூலம் தீயணைப்பு வாகனங்கள் மற்றும் பயிற்சி பெற்ற மீட்பு குழுவினர் பணியமர்த்தப்பட உள்ளார்கள்.

கண்ணகி கோயில் சித்ராபௌர்ணமி திருவிழாவினை சிறப்பாக கொண்டாடிட பக்தர்கள் அனைவரும் இருமாநில மாவட்ட நிர்வாகத்தின் வழிகாட்டுதலுக்கு முழு ஒத்துழைப்பினை வழங்கிட வேண்டும் என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், துணை இயக்குநர்கள் விவேக் பரஸ்நாத் யாதவ் இ.வ.ப., (ஶ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம்), ஆர்.லட்சுமி இ.வ.ப., (பொ) (பெரியார் புலிகள் காப்பகம்), மாவட்ட வன அலுவலர் கிரண், இ.வ.ப., மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இணை இயக்குநர் மரு.கலைச்செல்வி, துணை இயக்குநர் மரு. வரதராஜன், செய்தி மக்கள் தொடர் அலுவலர் ஏ.எடிசன், வட்டார போக்குவரத்து அலுவலர் மாணிக்கம் மற்றும் வருவாய்த்துறை, வனத்துறை, போக்குவரத்துத் துறை, சுகாதாரத்துறை உள்ளிட்ட இரு மாநில அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கோத்ரேஜ் கேபிட்டல் கோவையில் மலிவு விலை வீட்டுவசதி நிதி திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது



கோவை ஏப்:18

கோவை மாவட்டம் லட்சுமி மில் பகுதியில் உள்ள தனியார் அரங்கில் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. இது குறித்து கூறுகையில் சொந்த வீட்டை வாங்குவதற்கான வாய்ப்பை விரிவுபடுத்துகின்ற வகையில் தனது துணை நிறுவனமான கோத்ரேஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் வழியாக மலிவு விலை வீட்டுக் கடன் திட்டத்தைத் தொடங்குவதன் மூலம் தமிழ்நாட்டில் விரிவாக்கத்தை வலுப்படுத்துகிறது.

தற்போதைய எம் எஸ் எம் இ இருப்பை நிறைவு செய்கின்ற, நகரத்திற்கான தனது அர்ப்பணிப்பை வலுப்படுத்தும் வகையில்,இந்த நிறுவனம் கோவையில் தனது 2வது கிளையைத் திறந்துள்ளது.

கோத்ரேஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி மெஹர்னோஷ் டாடா கூறுகையில், சம்பளதாரர்கள் மற்றும் சுயதொழில் செய்பவர்களின் வாடிக்கையாளர் போன்ற கோயம்புத்தூர், அதனைச் சுற்றியுள்ள மதுரை, நாகர்கோவில், திருநெல்வேலி, திருச்சி, சென்னை, சேலம் போன்ற சந்தைகள் உட்பட தமிழ்நாடு முழுவதும் தனது இருப்பை வலுப்படுத்த இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது. உள்ளூர் சூழலமைப்பு மற்றும் வேலைவாய்ப்பை ஆதரிக்கின்ற வகையில்,15 மலிவுவீட்டுநிதியளிப்பு கிளைகளைக் கொண்ட ஒரு வலையமைப்பை உருவாக்க இது நோக்கம் கொண்டுள்ளது.

கோவையில் ₹25 முதல் 50 லட்சம் வரையிலான விலைப் பிரிவில் மிகவும் பரபரப்பான தேவை நிலவுவதால், இந்தப் பிரிவு தொடர்ந்து வலுவான உந்துதலைக் கண்டு வருகிறது.

முன்னோக்கிப் பார்க்கையில்,அடுத்த பத்தாண்டுகளில் உற்பத்தி, ஜவுளி, தகவல் தொழில்நுட்பம், கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் நிலையான வளர்ச்சியால் உந்தப்பட்டதன் மூலம், தென்னிந்தியாவில் முக்கிய மலிவு வீட்டுவசதி மையமாக கோயம்புத்தூர் உருவெடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது,குறிப்பாக சரவணம்பட்டி, கோவில்பாளையம், சூலூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி சாலை மற்றும் மேற்குப் புறநகர்ப் பகுதிகள் போன்ற வளர்ந்து வரும் குடியிருப்பு வழித்தடங்களில்,மேம்படும் உள்கட்டமைப்பு மற்றும் இணைப்புத்திறனின் ஆதரவுடன், புலம்பெயர்வையும் வீட்டுத் தேவையையும் தீவிரப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### விளாத்திகுளத்தில்

# இரண்டு பயணிகளிடமிருந்து 37 லட்ச ரூபாய் பணம் பறிமுதல்



விளாத்திகுளம் ஏப்ரல் 18.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே பெருநாழி விலக்கில் தேர்தல் பறக்கும் படை நிலையான கண்காணிப்புக்குழு அலுவலர் சேகர் தலைமையில் வாகன சோதனை ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக மதுரையில் இருந்து விளாத்திகுளம் நோக்கி வந்த தனியார் பேருந்தினை சோதனை செய்தனர். அப்போது பேருந்தில் இருந்து இறங்கிய அருப்புக்கோட்டை சேர்ந்த ரவிச்சந்திரன் என்பவரை சோதனை செய்த போது அவரிடம் உரிய ஆவணம் இல்லாமல் 35 லட்சத்து 22,000 பணம் இருப்பது தெரிய வந்தது. அதேபோன்று மற்றொரு பயணி விளாத்திகுளம் அம்பாள் நகரை சேர்ந்த ராஜேந்திரன் என்பவரை சோதனை செய்தபோது உரிய ஆவணங்கள் இன்றி இருந்த 2 லட்சத்து 21 ஆயிரத்து 51 ரூபாய் இருப்பது தெரியவந்தது.

இதனை தொடர்ந்து இருவரிடமிருந்து பணத்தை பறிமுதல் செய்து விளாத்திகுளம் தாலுகா அலுவலகத்தில் ஒப்படைத்தனர். உரிய ஆவணம் இல்லாமல் பல லட்ச ரூபாய் பணம் என்பதால் அந்தப் பணத்தை தூத்துக்குடி வருமானவரித்துறை உதவி இயக்குனர் பாலமுருகனிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த பணம் அவர்களுக்கு எப்படி வந்தது. வாக்காளர்களுக்கு கொடுப்பதற்காக பணம் கொண்டுவரப்பட்டது என்பது குறித்து தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர். தனியார் பேருந்தில் இரண்டு பயணிகளிடம் 37 லட்ச ரூபாய் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

### தூத்துக்குடியில்

# சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு வெடிபொருள் கடைகளை மூட ஆட்சித் தலைவர் உத்தரவு

சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை நாளை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து வெடிபொருள் கடைகள் மற்றும் கிடங்குகளை மூடி வைக்க மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர்உத்தரவிட்டுள்ளார். தமிழகத்தில் சட்டமன்றப் பொதுத்தேர்தல் முன்னிட்டு பொது அமைதியைப் பேணும் வகையில் 1884ஆம் ஆண்டு வெடிபொருள் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற அனைத்துக் கடைகள் மற்றும் கிடங்குகளை மூடி வைக்கத் தமிழக அரசு (அரசாணை எண்: G.O (D) No. 454, உள்துறை, நாள்: 18.03.2026) ஆணையிட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையின்படி, தூத்துக்குடி மாவட்டத்தில் உரிமம் பெற்ற அனைத்து வெடிபொருள் விற்பனை நிலையங்கள் மற்றும் கிடங்குகள் வாக்குப்பதிவை 21.04.2026 முதல் 24.04.2026 வரை, வாக்கு எண்ணிக்கை 02.05.2026 முதல் 04.05.2026 வரை ஆகிய நாட்களில் கட்டாயம் மூடப்பட்டிருக்க வேண்டும்:

இந்தத் தடையை மீறிச் செயல்படும் வெடிபொருள் கடைகள் மற்றும் கிடங்குகளின் உரிமையாளர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் விஷு மகாஜன் தெரிவித்துள்ளார்.

### நாகர்கோவில் ஆட்சியர் அலுவலகத்தில்

# இயற்கை பொருட்கள் விழிப்புணர்வு கண்காட்சி; கலெக்டர் துவக்கி வைத்தார்



நாகர்கோவில், ஏப்.18

குமரி மாவட்ட அனைத்து வாக்காளர்களும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, நேற்று மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் மகளிர் திட்டம் சார்பில் சுய உதவிக்குழுவினர் இணைந்து சோளம், கம்பு, ராகி, நெல், கோதுமை, சிறுபருப்பு, பாசிப்பயறு, துவரை, உளுந்து, கொள்ளு, கடலை, மொச்சை, சவ்வரிசி, புளியமுத்து, வற்றல், அன்னாசிபழம், மாம்பழம், மாதுளை, திராட்சை, ஆரஞ்சு, தர்பூசணி, பலாபழம், மாங்காய்,

தக்காளி, கேரட், எலுமிச்சை பழம், வெண்டைக்காய், கத்தரி, நெல்லிக்காய், மரவள்ளி கிழங்கு உள்ளிட்ட இயற்கைபொருட்களை கொண்டு தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள், படங்கள், லோகோ, பாதகைகள், தயாரிக்கப்பட்டுபொதுமக்கள்மற்றும்அலுவலர்களின்பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

குறிப்பாக பட்டாம்பூச்சி வடிவில் வாக்காளர் உதவி எண், நவதானியங்களால் வடிவமைக்கப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம், சிவிஜில் செயலி, நீரின்றி மீன் வாழாது வாக்கின்றி ஜனநாயகம் வளராது என்ற விழிப்புணர்வு வாசகம், காய்கனிகளால் உருவாக்க இந்திய வரைபடம், அன்னாசி பழத்தால் உருவாக்கப்பட்ட 100 சதவீதம் வாக்களிப்போம் என்ற விழிப்புணர்வு வாசகம் உள்ளிட்டவை அனைவரின் கண்களையும் கவரும் வண்ணம் அமைக்கப்பட்டிருந்தது.

இந்த விழிப்புணர்வு கண்காட்சியினை மாவட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா தலைமை வகித்து தொடக்கி வைத்தார். சட்டமன்ற தொகுதி பொதுபார்வையாளர் சுபஸ்ரீ நந்தா, கிள்ளியூர் சட்டமன்ற தொகுதி பொது பார்வையாளர் மனிஷா சென்டியா ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் தேர்தல் விழிப்புணர்வு கண்காணிப்பு அலுவலர் மகளிர் சுய உதவி குழுவினர், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## களியக்காவிளை அருகே

# விவசாயி விஷம் குடித்து தற்கொலை

களியக்காவிளை, ஏப்.18

களியக்காவிளை அருகே மடிச்சல் பகுதியை சத்தியதாஸ் (57). விவசாயி. இவருக்கு படந்தாலுமூடு, சந்தவிளை என்ற பகுதியில் தென்னந்தோப்பு சொந்தமாக உள்ளது. இந்த நிலையில் நேற்று முன்தினம் வீட்டிலிருந்து வெளியே சென்றவர் பின்னர் வீட்டிற்கு செல்லவில்லை. இதனால் அதிர்ச்சி அடைந்த குடும்பத்தினர் பல்வேறு இடங்களில் தேடினர்.

அப்போது சந்த விளையில் உள்ள தென்னந்தோப்பில் சத்தியதாஸ் மயங்கி கிடப்பதாக குடும்பத்தினருக்கு தகவல் கிடைத்தது. அங்கு சென்று பார்த்த போது சத்தியதாஸ் அருகே விஷ பாட்டில் கிடந்துள்ளது. விஷம் குடித்ததை அறிந்த குடும்பத்தினர் உடனடியாக அவரை மீட்டு குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் சத்யதாஸ் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது குறித்து களியக்காவிளை போலீசார் வழக்கு பதிவு செய்து தற்கொலைக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## குளச்சலில் சாலையோரம் வசித்த

# முதியவர் சாவு போலீசார் விசாரணை

குளச்சல், ஏப்.18

குளச்சல் பகுதியில் கடந்த சில நாட்களாக வயதான முதியவர் ஒருவர் மக்களிடம் யாசகம் கேட்டு வாழ்ந்து வந்தார். கடந்த 2 மாதங்களுக்கு முன்பு இவரது இடது காலில் புண் ஏற்பட்டுள் நாளடைவில் புண் பெரிதானதால் மிகவும் அவதிப்பட்டு வந்துள்ளார். இதை பார்த்து சிலர் அவரை மீட்டு குளச்சல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் மேல் சிகிச்சைக்காக குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மருத்துவமனையில் அவர்கள் பெயர் கேட்டபோது ஜோசப் (71) என்பதை மட்டும் கூறியுள்ளார். ஊர் பெயர் உறவினர்கள் பற்றி எதுவும் கூறவில்லை. தீவிர சிகிச்சை பிரிவில் இருந்த அவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார். பின்னர் இது குறித்து குளச்சல் போலீசருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் உடலை மீட்டு பிணவறையில் வைத்துள்ளனர். மேலும் வழக்கு பதிவு செய்து இறந்தவருக்கு உறவினர்கள் யாராவது இருக்கிறார்களா? என்ற கோணத்தில் விசாரித்து வருகின்றனர்.

## தஞ்சாவூர் மாவட்டத்தில்

# 8 சட்டசபை தொகுதிகளிலும் தபால் வாக்கு செலுத்த ஏற்பாடு; கலெக்டர் தகவல்



தஞ்சாவூர் ஏப்ரல் 18.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 8 சட்டசபை தொகுதிகளிலும் தபால் வாக்குகள் செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் கூறி உள்ளார்

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறியிருப் பதாவது:

தமிழக சட்டசபை தேர்தல் வருகிற 23ஆம் தேதி வியாழக்கிழமை நடைபெறுகிறது .தஞ்சாவூர் மாவட்டத்தில் இந்த பொது தேர்தலு க்கான வாக்குப் பதிவு 8 சட்டசபை தொகுதிக்குட்பட்ட அனைத்து வாக்குச்சாவடி நிலையங்களிலும் காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற உள்ளது

வாக்குப்பதிவு நாளன்று வாக்கு ச்சாவடி சென்று வாக்களிக்க இயலாத வகையில் அத்தியாவசிய பணிகளில் ஈடுபட்டுள்ள தெற்கு ரயில்வே, பத்திரிக்கை துறையினர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், தீயணைப்பு மற்றும் மீட்பு, சிறை மற்றும் சீர்திருத்த சேவைகள் மற்றும் போக்குவரத்து போலீஸ் ஆகிய துறைகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கு தபால் வாக்கு சீட்டு மூலம் வாக்களிக்கலாம் என இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது

இதன் அடிப்படையில் மேற்குறிப் பிட்டுள்ள அலுவலர்களுக்கு தகவ ல் வாக்கு செலுத்துவதற்கான படிவம் 12 டி வழங்கப்பட்டுள்ளது மேற்கூறிய அத்தியாவசிய பணி களில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் , பூர்த்தி செய்யப்பட்ட படிவம் 12 டி மற்றும் வாக்காளர் அடையாள அட்டையுடன் வெள்ளிக்கிழமை இன்று முதல் வருகிற 19ம் தேதி வரை சம்பந்தப்பட்ட தேர்தல் நடத் தும் அலுவலர் அலுவலகத்தில் நேரில் சென்று தங்களுடைய வாக்கினை அங்கு அமைக்கப்பட்டு ள்ள தபால் வாக்கு மையத்தில் செலுத்தலாம் .போலீசார்20, 21,22 ஆம் தேதிகளிலும், சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவ லகத்தில் அமைக்கப்பட்டுள்ள தபால் வாக்கு மையத்திலும், வாக்கு சாவடிகளில் வாக்கு சாவடி அலுவல ர்களாக பணிபுரிய உள்ள அலுவல ர்கள் 19ஆம் தேதி மற்றும் 22 ஆம் தேதி ஆகிய தேதிகளில் 2ம் கட்ட பயிற்சி வழங்கப்படும் பயிற்சி மையத்தில் அமைக்கப்பட்டுள்ள தபால் வாக்கு மையத்திலும், தங்களுக்குரிய வாக்கினை செலுத்தலாம் .

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது



## தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள வாக்குப்பதிவு எந்திரங்களில்

# வேட்பாளர்களின் பெயர் சின்னம் பொருத்தும் பணி கலெக்டர் பிரியங்கா பங்கஜம் பார்வையிட்டார்

தஞ்சாவூர் ஏப்ரல் 18.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 8 சட்டசபை தொகுதியிலும் 94 பேர் போட்டியிடுகிறார்கள். இந்த நிலை யில் 8 சட்ட சபை தொகுதிகளிலும் அந்தந்த தொகுதிகளில் போட்டி யிடும் வேட்பாளர்களின் படம் , பெயர், சின்னங்களை மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் பொருத்தும் பணி தொடங்கியது

அதன்படி தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலும் இந்த பணி வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் முகவரிகள் முன்னிலையில் தொடங்கின .இதனை மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் நேரில் பார்வையிட்டார் அப்போது வருவாய் கோட்டாட்சியர் நித்யா,தாசில்தார் சிவக்குமார், மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.



## மதுக்கரையில்

# சாய் லட்சுமி வீட்டு மனை விற்பனை துவக்க விழா

கோவை ஏப் :18

கோவை, மதுக்கரை நகராட்சிக்கு உட்பட்ட குரும்பபாளையம் சாலை அருகில் எம் எம் எஸ் குரூப்ஸ்இன் சாய் லட்சுமி பார்க் ப்ரீமியம் பிளாட் விற்பனை துவக்க விழா நடைபெற்றது.இதனை அதன் நிறுவனர் எம் எம் சங்கர் மற்றும் அவரது மகன் பிரதீப் சங்கர் ஆகியோர் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார்கள். இது குறித்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர்,இங்கு அமைந்துள்ள வீட்டு மனைகள் டி டி சி பி மற்றும் ஆர்ஈ ஆர்ஏ அனுமதி பெற்றும், ஒவ்வொரு மனையும் தனித்தனியாக பட்டா பெறப்பட்டுள்ளது.

மேலும் அடிப்படை வசதிகளான கேட்டேட் கம்யூனிட்டி, சோலார் மின் விளக்குகள், தார்ச் சாலை,குடிநீர் குழாய் இணைப்பு, பாதாள சாக்கடை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மனைக்கு அருகில் சேலம் கொச்சின் தேசிய நெடுஞ்சாலை மற்றும் மதுக்கரை இரயில் நிலையம் அமைந்துள்ளது. அனைத்து வீட்டு மனைகளிலும் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது.24 மணி நேரமும் பாதுகாப்பு காவலர்கள்போடப்பட்டுள்ளது. இடம் வாங்கி,வீடு கட்ட வீட்டுக்கடன் ஏற்பாடு செய்துதரப்படும்.மொத்தமாக 95 மனைகள் விற்பனைக்கு உள்ளதாக அவர் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியை சி. சாகுல் ஹமீது ஏற்பாடு செய்திருந்தார். என்பது குறிப்பிடத்தக்கது.



## சூலூர்

# சட்டமன்ற தொகுதி தவெக வேட்பாளர் விவசாயிகளிடம் வாக்கு சேகரித்தார்

கோவை ஏப்:18

கோவை மாவட்டம் சூலூர் சட்டமன்ற தொகுதி தவெக வேட்பாளர் என் எம் சுகுமார் செஞ்சேரிமலை, குமாரபாளையம், மலையடிபாளையம், செஞ்சேரி புத்தூர், வடுகபாளையம், கரையாம் பாளையம்,சின்னம நாயக்கன் பாளையம், சாலைப்புதூர் ஆகிய பகுதியில் உள்ள, விவசாயிகள், கைத்தறி நெசவாளர்கள், மசூதி சர்ச் ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்களிடம் நேரில் சென்று குறைகளை கேட்டறிந்து வாக்கு சேகரிக்கும் பொழுது பொதுமக்கள் அடிப்படை வசதிகள் ஆனதண்ணீர்தார்சாலை கால்வாய் தெரு விளக்கு ஆகிய கோரிக்கைகளை முன் வைத்தனர். இவை அனைத்தும் தலைவர் இடத்தில் சொல்லி இந்த குறைகளை தீர்ப்பேன் என்று விசில் சின்னத்திற்கு வாக்கு அளிக்குமாறு பிரச்சாரம் மேற்கொண்டார். உடன் தொண்டர்கள் ஏராளமான கலந்து கொண்டு வாக்கு சேகரித்தினர்.



## தொகுதி மறுவரையறை மசோதாவிற்கு எதிர்ப்பு

# மசோதா நகலை எரித்து தி.மு.க.வினர் போராட்டம் வீடுகளில் கருப்பு கொடி ஏற்றி எதிர்ப்பு

தஞ்சாவூா்.ஏப்.18.

தஞ்சாவூர் மாவட்டத்தில் தொகுதி மறுவரையறை மசோதாவு க்கு எதிர்ப்பு தெரிவித்து, தமிழகம் முழுவதும் வீடுகளில் கருப்பு கொடி ஏற்றும் போராட்டம் மற்றும் மசோ தா நகல் எரிப்பு போராட்டம் நடத்துவோம் என்று தி.மு.க தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார். இந்தப் போராட்டத்திற்கு கூட்டணி கட்சியினரும் ஆதரவு தெரிவித்தனர்.

சென்னையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ,கருப்பு கொடி ஏற்றும் போராட்டம் மற்றும் மறுவரையறை நகல் எரிப்பு போராட்டம் நடைபெற்றது. இதை தொடர்ந்து தமிழகம் முழுவதும் தி.மு.க. வினர் தொகுதி மறுவரையறை மசோதாக்கள் எரிப்பு போரா ட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் தங்களது வீடுகளிலும் கருப்புக்கொடி ஏற்றி உள்ளனர். தஞ்சாவூர் பழைய பஸ் நிலையம் அருகே உள்ள அண்ணா சிலை முன்பு தி.மு.க சார்பில் போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத் தில் தி.மு.க உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினரும், முன்னாள் மத்திய அமைச்சருமான எஸ்.எஸ். பழனி மாணிக் கம், தலைமை செயற் குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி. நீலமேகம் எம்.எல்.ஏ, செல்வம், தி.மு.க மாநகர செயலாளரும், தஞ்சை சட்ட மன்ற தொகுதி வேட்பாளருமான சண். ராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி, பொதுக்குழு உறுப்பினர் ஆறுமுகம், மாவட்ட துணை செயலாளர் கனக வல்லி பாலாஜி, ஒன்றிய செயலாளர் செல்வகுமார், பகுதி செயலாளர்கள் மேத்தா, நீலகண்டன், கார்த்திகேயன், வாசிம்ராஜா மற்றும் அனைத்து பிரிவு நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு தொகுதி மறுவரையறை மசோதா நகலை எரித்து போராட்டத்தில் ஈடுபட்டனர் .

தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து தஞ்சை மாவட்டத்தில் தி.மு.க நிர்வாகிகள் தங்களது வீடுகளில் கருப்பு கொடி ஏற்றினர். தஞ்சாவூர் சீனிவாசபுரத் தில் உள்ள முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.எஸ். பழனி மாணிக்கம், மருத்துவ கல்லூரி பகுதி கூட்டுறவு காலனியில் உள்ள மாநகர செயலாளர் சட்ட மன்ற தொகுதி வேட்பாளர்சண்.ராமநாத ன் மற்றும் அனைத்து நிர்வாகிகளும் தங்களது வீடுகளில் தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்பு கொடி கள் ஏற்றி தங்களது எதிர்ப்புகளை பதிவு செய்தனர்.

திருவையாறு அருகே நடுக்கடையில் திமுக மத்திய மாவட்ட செயலரும் திருவையாறு தொகுதி திமுக வேட்பாளருமான துரை சந்திரசேகரன் தலைமை யில் மறுவரையறை மசோதா நகல் எரிக்கப்பட்டது

கும்பகோணத்தில் தஞ்சாவூர் வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும் கும்பகோணம் சட்டப் பேரவை வேட்பாளருமான அன்பழகன் தலைமையில் கட்சியினர் மாவட்ட திமுக அலுவலகத்தில் இருந்து ஊர்வலமாக மகாமககுளம் வரை கருப்பு பலூன்களை கையில் ஏந்தி ஊர்வல மாக சென்றனர். அங்கு மத்திய அரசுக்கு எதிராக முழக்கமிட் டு , பலூன்களை பறக்க விட்டனர் பின்னர் மறுவரையறை மசோதா நகலை தீ வைத்து எரித்தனர்

பாபநாசம் வட்டம் அய்யம்பேட்டையில் நகர திமுக செயலாளர் வழக்கறிஞர் டி பி டி துளசி ஐயா தலைமை யிலும், அம்மாபேட்டை ஒன்றிய பகுதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போராட்டமும் நடைபெற்றது

மேரிஸ் கார்னர் புதிய பகுதியில் ஜனநாயக தொழிலாளர் முன்னணி சார்பில் மாவட்ட செயலாளர் லட்சுமணன் தலைமையில் இடதுசாரி கள் பொது மேடை ஒருங்கிணைப்பாளர் துரை மதிவாணன், விடுதலை சிறுத்தை கட்சி மாவட்ட துணை செயலாளர் தமிழ் முதல்வன், தொழிலாளர் விடுதலை முன்னணி மாவட்ட செயலாளர் யோகராஜ் உள்ளிட்டோர் கருப்புக் கொடி ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதே போல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட அலுவலகத்திலும், மாலை நேர காய்கறி அங்காடி முன் ஏஐடியுசி சார்பில் கருப்பு கொடிஏற்றப்பட்டது

# தேர்தல் அலுவலர்கள் தபால் வாக்குப்பதிவு கலெக்டர் ஆய்வு




சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு நீலகிரி மாவட்டத்தில் உள்ள மூன்று தொகுதிகளிலும் தேர்தல் பணிகளை மேற்கொள்ளும் அதிகாரிகளுக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது.இந்நிலையில் தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்கள் தபால் ஓட்டு போடுவதற்காக அனுமதி தேர்தல் ஆணையம் வழங்கி உள்ளதால் நேற்று மாவட்டத்தில் உள்ள மூன்று தொகுதியிலும் பணியாற்றும் தேர்தல் அலுவலர்கள் தபால் ஓட்டு போட்டனர் குன்னூரில் உள்ள தனியார் பள்ளி வளாகத்தில் தபால் ஓட்டுகள் பதிவு செய்யப்பட்டது. இதனை மாவட்ட ஆட்சியரும், தேர்தல் நடத்தும் அலுவலருமான லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு வாக்குப்பதிவை துவக்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட பயிற்சியை ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சியர்துரிதமாக இப்பணிகளை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார். அவருடன் குன்னூர் சப் கலெக்டர் சங்கீதா மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.